செய்தி வெளியீடு எண் : 13 நாள் : 21.04.2019

**தேனி கம்மவர் சங்கம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் மூன்று அடுக்கு பாதுகாப்பு - மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆய்வு**

தேனி மாவட்டத்தில் கடந்த 18.04.2019 அன்று எண் 33, தேனி பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் மற்றும் 198 ஆண்டிபட்டி & 199 பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்ற போது பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேனி கம்மவர் சங்கம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் பாதுகாப்பான அறைகளில் வைக்கப்பட்டு சீல் இடப்பட்டுள்ளது. இம்மையத்தினை பாதுகாப்பதற்கென தேர்தல் ஆணையத்தால் மூன்று அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ள சீல் இடப்பட்ட அறைக்கு வெளியே முதல் சுற்றில் துணை ராணுவப் படையினரும் (B.S.F), இரண்டாவது சுற்றில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணியினரும் காவல் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மூன்றாவது சுற்றில் ஆயுதப்படை காவலர்கள் பாதுகாப்பு பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட அனைத்து பாதுகாப்பு அறைகளிலும் CCTV கேமரா பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பில் உள்ளது. CCTV கேமரா மூலம் பதிவாகும் காட்சிகளை 24 மணி நேரமும் பார்வையிட்டு கண்காணிப்பதற்காக துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கட்டுபாட்டு அறையில் இருந்து கண்காணித்து வருகின்றனர். இக்கட்டுப்பாட்டு அறையில் வேட்பாளர்களின் முகவர்களும் உடனிருந்து கண்காணிக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கென தனியாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர்த்து மேற்கண்ட கல்வி நிறுவன வளாகத்திற்குள் செல்லும் வாகனங்கள், கல்லூரி பணியாளர்களை உள்ளூர் காவல் துறையினரால் சோதனை செய்து அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டுமே வளாகத்தில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

வாக்கு எண்ணிக்கை மையத்தில் இன்று 21.04.2019 பிற்பகல் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வீ. பாஸ்கரன் ஆகியோர் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கூட்டு ஆய்வு செய்தனர். இவ்வாய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர், வாக்கு எண்ணிக்கை மைய பொறுப்பு அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.